




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிடமாடல் அரசு பொறுப்பேற்று நான்காண்டுகள் நிறைவடைந்து, ஐந்தாம் ஆண்டு தொடக்கவிழாவை முன்னிட்டு, நேற்று (7.5.2025) சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில், 214 புதிய பேருந்துகளின் சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்து, அப்பேருந்துகளை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, ஆ.ராசா, தயாநிதி மாறன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, போக்குவரத்துக் கழகங்களின் மேலாண் இயக்குநர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருச்சி மாவட்டத்திற்கு வருகை தரும்

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## தெற்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!



திருச்சி, மே 8 - முதல்வரின் திருச்சி வருகையையொட்டி திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

திருச்சி மாவட்டத்திற்கு பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக திருச்சி விமான நிலையத்திற்கு இன்று காலை சரியாக 12:00 மணிக்கு வருகை தரும் கழகத் தலைவர், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான முறையில் வரவேற்பு கொடுப்பது, அதனைத் தொடர்ந்து திருவெறும்பூர் துவாக்குடி யில் மதியம் 01.00 மணி அளவில் நடைபெறும் மாதிரி பள்ளி திறப்பு விழா நிகழ்விலும் பெரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், வட்ட, வார்டு கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் அணிகளின் அனைத்து நிர்வாகி கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக தொண்டர்கள் பெரும் திரளாக கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

## ஒன்றிய-நகர-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தென்காசி தெற்கு மற்றும் தேனி தெற்கு ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 10.05.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | தென்காசி தெற்கு | கோல்டன் ஹால், 23, எல்.எஸ்.கட்டடம் (ஆனைமலை டொயோட்டாவுக்கு எதிரே), பிரதான சாலை, எல்.எஸ்.நகர், குத்துக்கல்வலசை. |
| 11.05.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 4.00 மணி | தேனி தெற்கு | அழகர் திருமண மண்டபம், தேனி – மதுரை ரோடு, கொண்டம நாயக்கன்பட்டி, ஆண்டிப்பட்டி. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 06-05-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


